| வர்த்தக மற்றும் வேறு நிர்மாணம் | 100 ச.மீற்றருக்கு 3,000.00 ரூபாவும் விஞ்சுதலான ஒவ்வொரு சதுரமீற்றருக்கு 20.00 ரூபாவும் |

08-196/9

---

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் - 2025

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வைத்திருக்கும் நாய்களுக்கு நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 477) இன் (4)ஆம் பிரிவின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டுக்கான பதிவுக் கட்டணமாக நாய் ஒன்றுக்கு ரூபா 50.00 அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபை,
உப்புவெளி, திருகோணமலை.

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
2024, ஒகத்து 07.

08-196/10

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

*கட்டாக்காலியாக திரியும் மிருகங்களை தடை செய்தல் - 2025*

*1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 66 (1), (2), (3), (4) ஆம் உப பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் பிரதான பாதைகள், உள்ளகபாதைகள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலியாக திரியும் ஆடுகள், மாடுகள் பிரதேசசபையினால் பிடிக்கப்பட்டு அதற்கென அமைக்கப்பட்டுள்ள பொது இடங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு 2025.01.01 ஆந் திகதியிலிருந்து கட்டணங்கள் அறவிடப்படும் என்பதை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிவதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை,
உப்புவெளி, திருகோணமலை,

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
*2024, ஒகத்து 07.*

| | | ரூபா.ச |
|---|---|---|
| (1) | கால்நடை பிடிப்பதற்கான விதிப்பனவு (தலா ஒன்றுக்கு) | 1,500.00 |
| (2) | கால்நடை ஒன்றுக்கான பராமரிப்புக்கான விதிப்பனவு (நாள் ஒன்றுக்கு) | 500.00 |
| (3) | மிருகத்தினை 24 மணி நேரத்திற்குள்ளாக மீட்டுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் மேலதிக நாள் ஒன்றுக்கு | 500.00 |

*அவ்வாறு தடை செய்யப்படும் மிருகங்களுக்கான மேற்கூறிய கட்டணத்தைச் செலுத்தி மீட்டுக்கொள்ளத் தவறினால் மிருகங்கள் கைப்பற்றப்பட்டு 10 நாட்களில் தடை செய்யப்பட்ட மிருகங்கள் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படுவதுடன் ஏலத்தில் கிடைக்கும் பணம் பிரதேச சபையின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படும்.*

*08-196/11*

---

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

*கற்கள், மணல், கிரவல் அள்ளும் வாகனங்களுக்கு வீதிப் பராமரிப்பு கட்டணம் - 2025*

*1987ஆம் ஆண்டில் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 70(1),(2) ஆம் பிரிவுகளின் கீழ் பிரதேச சபைகளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் கீழ்காணும் தேவைகளுக்காக பயன்படுத்துகின்ற வாகனங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை பிரகாரம் கட்டணம் நியமித்து 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் அறவிடுவதென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிவதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை,
உப்புவெளி, திருகோணமலை,

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
*2024, ஒகத்து 07.*

**அட்டவணை I**

| | ரூபா.ச |
|---|---|
| கிரவல் அகழ்வு கியூப் ஒன்றிற்கு | 50.00 |
| மணல் அகழ்வு கியூப் ஒன்றிற்கு | 50.00 |
| கருங்கல் அகழ்வு கியூப் ஒன்றிற்கு | 50.00 |

**அட்டவணை II**

| | |
|---|---|
| கிரவல் கியூப் ஒன்றிற்கு வீதி பாராமரிப்பு கட்டணம் | 100.00 |
| மணல் கியூப் ஒன்றிற்கு வீதி பாராமரிப்பு கட்டணம் | 100.00 |
| கருங்கல் கியூப் ஒன்றிற்கு வீதி பாராமரிப்பு கட்டணம் | 100.00 |
| கிரவல் அகழ்வின் போது வீதி பயன்பாட்டின் போது ஏற்படும் சேதத்தினை திருத்தம் செய்வதற்கான மீளளிக்கப்படும் வைப்புக் கட்டணம் | 100,000.00 |

**100 கியூபிற்கு பின் கிறவல் அகழ்வுக்கு மீளவும் அனுமதி பெறல் வேண்டும்.**

08-196/12

---

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

சபையின் இயந்திரங்கள் /உபகரணங்கள் /வாகனங்கள் வாடகைக்கு விடுதல் கட்டணங்கள் - 2025

1987ஆம் ஆண்டில் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 122ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(ix) (ஆ) பிரிவுகளின் கீழ் பிரதேச சபைகளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய கீழ் காணும் தேவையின் பொருட்டு மக்கள் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்காக மலசல கழிவகற்றும் வாகனம் / இயந்திரங்கள் / உபகரணங்கள் / கட்டடங்கள் வாடகைக்கு விடல் குப்பை அகற்றல் ஆகியவற்றுக்கு விதிக்கப்படும் கீழ்காணும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் 2025.01.01 ஆந் திகதியிலிருந்து கீழ்வருமாறு அமையுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபை,
உப்புவெளி, திருகோணமலை.

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
2024, ஒகத்து 07.

**அட்டவணை**

**சூழல் பாதுகாப்பு குப்பை அகற்றல்**

| இல. | விபரம் | பிரதேசசபை வாகனம் ரூபா. |
|---|---|---|
| 01. | அரச திணைக்களங்கள், வங்கி, அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிலையங்கள் லோட் ஒன்றிற்கு (Tractor) | 6,000.00 |
| 02. | பாடசாலைகள், மதத்தலங்கள் மற்றும் வீடு லோட் ஒன்றிற்கு (Tractor) | 2,000.00 |
| 03. | துறைமுக கப்பல் கழிவு வெளியேற்ற அனுமதிக்கட்டணம் லோட் ஒன்றிற்கு (Tractor) | 7,200.00 |
| 04. | துறைமுக கப்பல் கழிவு வெளியேற்ற அனுமதிக்கட்டணம் 1 ரிப்பர் 2.5 கியூப் சுமை | 15,000.00 |

**வாகனம் வாடகைக்கு விடல்** - I

| | | | |
|---|---|---|---|
| 01. | JCB (பெக்கோ லோடர்) | இயந்திர மணித்தியாலத்திற்கு எரிபொருளும் இயக்குனரும் உட்பட (6 மணித்தியாலத்திற்கு குறைந்த சேவைக்கு போக்குவரத்து கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.) | 6,700.00 |
| 02. | Tipper (போக்குவரத்து கட்டணம்) | ஒரு நாளைக்கு எரிபொருளும் இயக்குனரும் உட்பட (8 மணித்தியாலம்) | 18,000.00 |
| 03. | உழவியந்திரம் பெட்டியுடன் (போக்குவரத்துக் கட்டணம்) | இயந்திர மணித்தியாலத்திற்கு எரிபொருளும் இயக்குனரும் உட்பட<br>ஒரு நாளுக்கு எரிபொருளும் இயக்குனரும் உட்பட | 1,400.00<br>10,500.00 |

**வாகனம் வாடகைக்கு விடல்** - II **(வயல் உழவு, அறுவடைக்கானது)**

| | | | |
|---|---|---|---|
| 01. | உழவியந்திரம் | உழவு இயந்திரம் சாரதியுடன் 3 உழவு அடிப்பதற்கான கூலி - ஒரு ஏக்கருக்கு (சபைக்கு வெளியே செல்வதாயின் எரிபொருட்செலவு செலுத்த வேண்டும்.) | 16,000.00 |
| | | உழவு இயந்திரம் சாரதியுடன் 2 உழவு அடிப்பதற்கான கூலி - ஒரு ஏக்கருக்கு (சபைக்கு வெளியே செல்வதாயின் எரிபொருட்செலவு செலுத்த வேண்டும்.) | 12,000.00 |
| 02. | Havester Machine | சபைக்கான அறுவடை வெட்டு இயந்திரம் சாரதியுடன் கூலி ஒரு ஏக்கருக்கு | 12,500.00 |

*குறிப்பு* :- குறித்த பிரதேச விவசாய சம்மேளனத்தின் விலைநிர்ணயத்திற்கு அமைய கட்டணத் தொகை மாறுபடும்.

**வாகனம் வாடகைக்கு விடல்** - III

| இல. | வாகனம் | நாளொன்றுக்கான வாடகை சபை எல்லைக்குட்பட்ட பகுதி | சபை எல்லைக்கு வெளிப்பட்ட பகுதி | வைப்பு மீளளிக்கத்தக்க கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. | வீதி உருளை (10 தொன்) (Road Roller) எரிபொருள், போக்குவரத்துக் கட்டணம் நீங்கலாக (6 மணித்தியாலம் மட்டும்) | 16,000.00 | 18,000.00 | 20,000.00 |

| | | நாளொன்றுக்கான வாடகை | | |
|---|---|---|---|---|
| இல. | வாகனம் | சபை எல்லைக்குட்பட்ட பகுதி | சபை எல்லைக்கு வெளிப்பட்ட பகுதி | வைப்பு மீளளிக்கத்தக்க கட்டணம் |
| 02. | கை றோலர் உருளை (Hand Roller) (With Vibrating 02 Ton) எரிபொருள், போக்குவரத்துக் கட்டணம் நீங்கலாக | 8,700.00 | 9,800.00 | 10,000.00 |
| 03. | நீர் கொள்கலன் மட்டும் நீர் நீங்கலாக Water Bowser only (6000 L) | 11,200.00 | 12,300.00 | - |
| 04. | a) வெற்றுக்கொள்கலன் (3000L) (Water Bowser with out Water and including transport) | 6,300.00 | 7,000.00 (போக்குவரத்து கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்) | - |
| | b) நீர் கொள்கலன் தரித்து நிற்பதற்கான கட்டணம் நாள் ஒன்றுக்கு (Water Bowser ) | 2,500.00 | 3,500.00 | - |
| | c) நீர் கொள்கலன் மட்டும் (நீர் பவுசர் மட்டும் நீர் பெற்றுக்கொள்ளல் மற்றும் போக்குவரத்து ஏற்பாடு விண்ணப்பதாரியால் மேற்கொள்ளப்பட வேண்டும்.) (Water bowser with water per load) | 4,000.00 | 5,000.00 | - |
| 05. | d) பிளேட் கெம்பெக்டர் இயக்குனருடன் எரி பொருள் நீங்கலாக ( Plate Compactor with Operator) | 5,500.00 | 6,700.00 | - |

கழிபவுசர்
(Gully Bowser)

ஒரு லோட் (Per Load)

| | விபரம் | சபை எல்லைக்குள் In side | | சபை எல்லைக்கு வெளியில் Out side (போக்குவரத்துக் கட்டணம் உட்பட) | |
|---|---|---|---|---|---|
| | | 3000 L | 6000 L | 3000 L | 6000 L |
| 01 | பாடசாலைகள், மதத்தலங்கள் (School and Religions Centers) | 5,100.00 | 9,300.00 | 6,200.00 | 10,500.00 |
| 02 | வீடுகள் (Residence) | 5,500.00 | 9,500.00 | 6,200.00 | 10,200.00 |
| 03 | அரச திணைக்களங்கள், வங்கி, அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிலையங்கள் (Government Department, Bank, N.G.O, Private Industries) | 9,200.00 | 17,300.00 | 10,400.00 | 18,500.00 |

**சபைக்குச் சொந்தமான பொது மண்டபம் மற்றும் அறைகள் வாடகைக்கு விடல்.**

| தொடர் இல. | மண்டபம் | ஒலிபெருக்கியுடன் இயக்குனரும் | ஒலிபெருக்கியும் இயக்குனரும் இல்லாமல் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 01. | பிரதான மண்டபம் - நிகழ்வு ஒன்றுக்கு | 25,000.00 | 20,000.00 | 5,000.00 |

**சபைக்குச் சொந்தமான பல்நோக்கு மண்டபம் (மங்கள வைபவங்களுக்கு மட்டும்) மற்றும் அறைகள் வாடகைக்கு விடல்.**

| தொடர் இல. | மண்டபம் | விபரம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 01. | பல்நோக்கு கட்டிடம் - ஒருநாள் (குளிரூட்டல் வசதியுடன் கூடியது) (மானி வாசிப்பின் ஊடாக மின்கட்டணம் அறவிடப்படும்) (10 மணித்தியாலயம்) | 40,000 (மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ரூபா.1,000.00 அறவிடப்படும்) | 10,000.00 |
| 02. | அறை வாடகை (ஒரு நாளைக்கு) (Single Bed - Non AC) | | 2,500.00 |
| 03. | அறை (Single Bed - Non AC) | | 3,000.00 |
| 04. | அறை (Double Bed - AC) | | 4,000.00 |

**உபகரணங்கள் வாடகைக்கு விடல்**

| | | | |
|---|---|---|---|
| 01. | Concrete Mixer (Diesel) | With Operator and without Transport & fuel (Per Day) | 11,400.00 |
| 02. | Concrete Mixer (Diesel) | Without Operator and without Transport & fuel (Per Day) | 8,900.00 |
| 03. | Poker Vibrator (Petrol / Diesel) | With Operator and without Transport & fuel (Per Day) | 6,700.00 |
| 04. | Poker Vibrator (Petrol / Diesel) | Without Operator and without Transport & fuel (Per Day) | 4,200.00 |
| 05. | Poker Vibrator (Electric) | With Operator & Transport (Per Day) | 5,000.00 |
| 06. | Poker Vibrator (Electric) | Without Operator & Transport (Per Day) | 2,500.00 |
| 07. | Steel Box bar or "C" Purlin | 50mmx150mmx6000mm, (One Number Per Day) | 500.00 |

08-196/13

---

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

வர்த்தக வரி அறவிடல் - 2025

1987 ஆம் ஆண்டில் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 147ம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள ஏதேனும் துணை விதியின்

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வது அல்லது 150ம் பிரிவின் கீழ் ஏதும் ஒரு வரியைச் செலுத்துவதற்கு அவசியம் அல்லாத மற்றும் 152ஆம் பிரிவின் (1)வது உப பிரிவின் கீழ் குறிப்பிடப்படுகின்ற I ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தொழிலை பட்டணமும் சூழலும் உப்புவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் 2025ஆம் ஆண்டில் நடாத்திச் செல்லும் அனைத்து நபர்களிடமிருந்தும் அத் தொழிலின் 2025 ஆம் ஆண்டின் வருமானத்திற்கமைய இங்கு கீழே II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2025 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆந் திகதிக்கு முன் பட்டணமும் சூழலும் உப்புவெளி பிரதேச சபைக்கு வர்த்தக வரியை செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமையவும் 2024.08.07 ஆந் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கமைய இத்தால் அறிவிக்கின்றேன்.

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபை,
உப்புவெளி, திருகோணமலை.

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
2024, ஓகத்து 07.

**அட்டவணை – I (i) – வியாபார வரி**

01. பாடசாலைப் புத்தகங்கள் காகிதாதிகள் சேகரித்தலும் விற்பனையும்
02. மின் பொருட்கள் விற்பனை
03. பரிசுப் பொருட்கள் விற்பனை
04. சில்லறை மற்றும் மொத்த வியாபாரம்
05. கட்டிட பொருட்கள் விற்பனை
06. பிளாஸ்டிக் மற்றும் அலுமினியப் பொருட்கள் விற்பனை
07. பாதணிகள் வியாபாரம்
08. தைத்து தயாரிக்கும் உடுப்பு விற்பனை நிலையம்
09. வீடியோ மற்றும் புகைப்படப் பிடிப்பு நிலையம் வைத்திருத்தல்
10. வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்தல்
11. மொத்த வியாபாரம்
12. செம்பு பொருட்கள் விற்பனை
13. தங்க ஆபரண வியாபாரம்
14. பழைய புதினப் பத்திரிகை சேகரித்தலும் விற்பனையும்
15. துவிச்சக்கர வண்டி விற்பனை
16. துவிச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள் விற்பனை
17. மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை
18. வாகனம் வடிவமைப்பு செய்யுமிடம் வைத்திருத்தல் (Modification)
19. திருமண வீடுகளுக்கு, மரணச்சடங்குகளுக்குரிய பொருட்கள் வாடகைக்கு விடல்.
20. தொலைபேசி திருத்துதல், விற்பனை நிலையம் வைத்திருத்தல்
21. ஒலிபெருக்கி பொருட்களை வாடகைக்கு வழங்குதல்
22. மரக்கன்று விற்பனை
23. வாகனங்கள் திருத்துதல் மற்றும் விற்பனை
24. சீட் வகைகளுக்கு குசன் செய்யும் நிலையம்
25. இரும்பு சேகரித்தலும் விற்பனையும்
26. வானொலி, தொலைக்காட்சி, உதிரிப்பாகங்கள் விற்பனை
27. தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி, தையல் இயந்திரம் விற்பனை
28. முச்சக்கரவண்டி திருத்துமிடம்
29. புதினப்பத்திரிகை கடை அல்லது விநியோகம் செய்தல்
30. மணிக்கூடு விற்கும் இடம் வைத்திருத்தல்

31. ஆடம்பரப் பொருட்கள் வைத்திருத்தல்
32. இரும்புக் குழாய் விற்பனை
33. தொலைத்தொடர்பு சாதனங்கள் விற்பனை
34. மீன்பிடி வள்ளங்கள் வைத்திருத்தல்
35. புடவை விற்பனை நிலையம் வைத்திருத்தல்
36. கொப்பறா வியாபாரம்
37. வாகனங்கள் கழுவுமிடம்
38. ஐஸ்கிறீம் மற்றும் ஐஸ்பழம் உற்பத்தியும் விற்பனையும்
39. சங்கு மற்றும் சிப்பிகள் சேகரித்தலும் விற்பனையும்
40. ஊதுவர்த்தி விற்பனையும்
41. ஓமத்திரவம் உற்பத்தியும் விற்பனையும்
42. தேயிலை வியாபாரம்
43. ரயர்கள் மீள் புதுப்பிக்கும் ஸ்தாபனம் வைத்திருத்தல் (Refill)

**அட்டவணை – I (ii) – வியாபார உரிமம்.**

1. மதுபானம் அல்லது பிறநாட்டு மதுபானம் விற்பனை.
2. மருந்துக்கடை வைத்திருத்தல் - பார்மசி
3. ஆயுர்வேத மருந்து வகை விற்பனை
4. மேற்கத்திய மருந்து வகைகளை வைத்திருத்தலும் விற்பனையும்
5. சேதனப் பசளை மற்றும் பீடை கொல்லிகள் வியாபாரம்
6. எரிபொருள் சேகரித்தலும் விற்பனை
7. மொத்த வியாபாரம்
8. வார்ப்பு உலோக தொழிற்சாலை நடாத்துதல்.
9. புட்சிட்டி நடாத்துதல்
10. எரிபொருள் நிலையம் வைத்திருத்தல்
11. அரைக்கும் ஆலை வைத்திருத்தல்
12. நாளாந்த வாடகைக்கு விடப்படும் விடுதி
13. கோழிப் பண்ணை நடாத்துதல்
14. நடமாடும் இனிப்பு உணவு வகைகள் விற்பனை
15. இருசக்கர வாகனம் திருத்துமிடம்.
16. சங்கு, சிற்பிகள் மூலம் அழகுப் பொருட்கள் விற்பனை

**அட்டவணை – I (iii) – தொழில் மீதானவரி**

1. தொலைத் தொடர்பு கோபுரம் நடாத்துதல்
2. மூக்குக் கண்ணாடி கடை வைத்திருத்தல்
3. தரகர்கள்
4. ஏலதாரர்கள், விளம்பரதாரர்கள்
5. ஒப்பந்தக்காரர்கள்
6. வெளிநாட்டு முகவர் நிலையம் வைத்திருத்தல்
7. அடகு பிடிக்கும் நிலையம் வைத்திருத்தல்
8. தனியார் கல்வி நிலையம்
9. வங்கி மற்றும் நிதி நிலையம்
10. காப்புறுதி நிலையம்
11. ரயர்களையும், ரியூப்களையும் உற்பத்தி மற்றும் விற்பனை
12. விநியோகஸ்தர்கள்
13. உல்லாச பயணச் சேவை நிலையம் நடாத்துதல்
14. சட்டத்தரணிகள் சேவை வழங்கும் அலுவலகம் நடாத்துதல்
15. சொத்துக்கள் மற்றும் காணி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடாத்துதல்
16. வாகன விற்பனையாளர்
17. இரத்தின வியாபாரம்

18. மோட்டார் வாகனங்கள் விற்பனை வியாபாரம்
19. மீன் வளர்ப்பு (பண்ணை)
20. ஆய்வு கூட சேவை, இரத்த பரிசோதனை செய்யும் நிலையம்
21. பல நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் சேவை வழங்கும் நிலையம் நடாத்துதல் (மின்சாரம் /நீர்வசதிகள் /கல்குவாரி)
22. தனியார் மருத்துவமனை நடாத்துதல்
23. கேபல் இணைப்பு வழங்கும் நிலையம் நடாத்துதல் (தொலைத்தொடர்பு)
24. பொது விளம்பர சேவை நிலையம் வைத்திருத்தல்
25. சீமெந்து பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை
26. தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை
27. காணிகள், குடிமனைகள் விற்பனை செய்து கொடுக்கும் நிறுவனம் நடாத்துதல்
28. சாரதி பயிற்சி பாடசாலை வைத்திருத்தல்
29. தொலைத்தொடர்பு நிலையம் நடாத்துதல்
30. கிராமிய வங்கி நடாத்துதல்
31. படம் வரைஞர் சேவைகள் வழங்கும் நிலையம் வைத்திருத்தல்
32. வாகன உதிரிப் பாகங்கள் விற்பனை
33. வைத்திய சேவை நிலையம்
34. மெத்தை உற்பத்தி ஸ்தாபனத்தை வைத்திருத்தல்
35. கொங்கிறீட் கம்பங்களை உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல்
36. வாளிகள் மற்றும் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை
37. இயந்திர மீன்பிடி வாடி வைத்திருத்தல்.
38. இறால் பண்ணை நடாத்துதல்
39. அரிசி, நெல் பசளை மொத்த விற்பனை நிலையம்
40. மென்பானம் மொத்த விற்பனை நிலையம் வைத்திருத்தல்
41. ஐஸ்வாடி வைத்திருத்தல்
42. செங்கல் உற்பத்தி மற்றும் விற்பனை
43. ஓடு உற்பத்தி மற்றும் விற்பனை
44. கொங்கிரீட் பொருட்கள் மற்றும் பிலொக் கல் உற்பத்தியும் விற்பனையும்
45. குடிநீர் உற்பத்தியும் வியாபாரமும்
46. உப்பளம் நடாத்துதல்
47. பப்படம் உற்பத்தியும் வியாபாரமும்
48. கருப்பட்டி உற்பத்தியும் வியாபாரமும்
49. பல் வைத்தியசாலை நடாத்துதல்
50. கேபல் வசதி ஏற்படுத்தும் நிலையம் வைத்திருத்தல் (தொலைக்காட்சி)
51. ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள் நிலையம் வைத்திருத்தல்
52. தனியார் பாலர் பாடசாலை நடாத்துதல்
53. பொதிகள் அனுப்பும் சேவை
54. கள்ளு சேகரித்தலும் விற்பனையும்
55. மாடு, ஆடு, கோழி வியாபாரம்
56. சூரிய ஒளியில் மின்சாரம் வழங்கும் நிலையம் நடாத்துதல்
57. மோட்டார் வாகனங்களுக்கு Body இணைக்கும் ஸ்தாபனத்தை வைத்திருத்தல்
58. உடல் வலுவூட்டல் நிலையம் வைத்திருத்தல்
59. அச்சகம் வைத்திருத்தல்
60. வாகனங்களுக்கு புகை பரீட்சித்தல் நிலையம்.
61. நீச்சல் பயிற்சி நிலையம் வைத்திருத்தல்.
62. பீடி சுருட்டு உற்பத்தியும் விற்பனையும்
63. கல்ஆலை வைத்திருத்தல் (Crusher)
64. எண்ணெய் உற்பத்தி செய்யும் நிலையம் வைத்திருத்தல்
65. மண்ணெண்ணெய் விற்பனை
66. நெல் குற்றும் ஆலை வைத்திருத்தல்
67. புகையிலை பதப்படுத்தலும் உலர்த்தலும்
68. வெற்று வாயு நிரப்பும் நிலையம் வைத்திருத்தல்.
69. உராய்வு எண்ணெய் வைத்திருத்தல

**அட்டவணை** - II

| நிரல் I<br>வர்த்தகத்தின் வருடாந்த வரவு | நிரல் II<br>செலுத்த வேண்டிய வருடாந்த வரி |
|---|---|
| ரூபா 6,000.00 இனை விஞ்சாதவிடத்து இல்லை | |
| ரூபா 6,000.00 இனை விஞ்சி ஆனால் 12,000.00 இனை விஞ்சாதவிடத்து | 90.00 |
| ரூபா 12,000.00 இனை விஞ்சி ஆனால் 18,750.00 இனை விஞ்சாதவிடத்து | 180.00 |
| ரூபா 18,750.00 இனை விஞ்சி ஆனால் 75,000.00 இனை விஞ்சாதவிடத்து | 360.00 |
| ரூபா 75,000.00 இனை விஞ்சி ஆனால் 150,000.00 இனை விஞ்சாதவிடத்து | 1,200.00 |
| ரூபா 150,000.00 இனை விஞ்சுகின்றவிடத்து | 3,000.00 |

மேலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வியாபாரங்கள் தொடர்பான கடந்த ஆண்டின் வருமான விபரங்களை அந்நிறுவனத்தின் முகாமையாளர், உரிமையாளர், கணக்காளர் அல்லது வேறு ஏதும் அதிகாரம் பெற்ற ஒருவரால் வருடா வருடம் பட்டணமும் சூழலும் உப்புவெளி பிரதேச சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.
மேலும் வியாபார மேம்படுத்தல் திட்டத்திற்காக அனுமதிக்கட்டணமாக ரூ. 1000.00 நாளொன்றுக்கு நில வாடகையாக ஒரு சதுர அடிக்கு ரூபா 10.00 வும் அறவீடு செய்யப்படும்.

08-196/14

---

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

தொழிற்துறை மீதான வரி அறவிடல் - 2025

1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 150ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பட்டணமும் சூழலும் உப்புவெளி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் கீழே உள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிட்ட ஏதாயினும் தொழிற் துறையொன்றை 2025 ஆம் ஆண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டால் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டவாறான அளவுகளிலான அனுமதிப்பத்திரக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு அறவிடுவதெனவும் இக்கட்டணங்களை 2025 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமையவும் 2024.08.07 ஆந் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கமைய இத்தால் அறிவிக்கின்றேன்.

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை,
உப்புவெளி, திருகோணமலை,

பட்டணமும் சூழலும் பிரதேச சபை அலுவலகம்,
2024, ஓகத்து 07.

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I<br>வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | செங்கல், ஓடுகள் களஞ்சியப்படுத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 2. | மட்பாண்டங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I வியாபாரத்தின் தன்மை | நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 3. | பழைய இரும்புப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 4. | சீமெந்து விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 5. | விறகுச்சாலை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 6. | வீட்டுத் தளபாட விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 7. | இரும்புப் பட்டறை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 8. | ஆபரணங்கள் பட்டறை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 9. | தங்கமுலாம் பூசும் இடம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. | தீந்தை, வானிஸ் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | வைக்கோல் கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. | பற்றரிகளை திரும்ப பலமூட்டும் அல்லது பழுதுபார்க்குமிடத்தை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. | வெற்று போத்தல் சேகரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. | சைக்கிள் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. | கடிகாரம் திருத்துமிடம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. | குளிரூட்டிகளை திருத்துதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. | குளிரூட்டும் பெட்டிகளையும் அதிகுளிரூட்டும் பெட்டிகளையும் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18. | மின்சாரப் பொருட்களை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. | நீர் இறைக்கும் இயந்திரம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. | வளிச்சீராக்கி பழுது பார்த்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21. | கையினால் மின்சக்தியால் இயங்கும் அச்சியந்திரசாலை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 22. | துணிகளுக்கு சாயமூட்டும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 23. | சுண்ணாம்பு அல்லது சுண்ணாம்புக் கற்களை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 24. | வாகனங்கள் வாடகைக்கு விடல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 25. | பாட்டுக்களையும் சங்கீதங்களையும் ஒளிப்பதிவு ஸ்தாபனம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 26. | தொலைக்காட்சி சினிமா கெசட்டுக்களை விற்பனை செய்தல், வாடகைக்கு விடல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 27. | நிழற்படப் பிரதி எடுக்கும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 28. | புகைப்பட நிலையம் வைத்திருத்தல் (நடமாடும்) | 500.00 | 750.00 | 1000.00 |
| 29. | மீன்பிடி இயந்திர உபகரணங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 30. | மீன்பிடி இயந்திரம் திருத்துமிடம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 31. | மீன்பிடிப் படகுகள் ஒட்டும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 32. | புகையிலை பதப்படுத்தலும் உலர்த்தலும் | 500.00 | 750.00 | 1000.00 |
| 33. | எருமை மாடு மற்றும் பசு மாட்டுப்பட்டி வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 34. | வீடியோ படப்பிடிப்பு நிலையம். | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தொ. இல.* | *நிரல் I வியாபாரத்தின் தன்மை* | *நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு* | | |
|---|---|---|---|---|
| | | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 35. | தொலைத்தொடர்பு நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 36. | சமையல் எரிவாயு சிலிண்டர் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 37. | விளையாட்டுப் பொருட்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 38. | அலுமினியம் பொருத்தும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 39. | ஆடம்பரப் பொருட்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 40. | ஸ்பிரே, பெயின்டிங், லேத் ஸ்தாபனத்தை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 41. | தொலைபேசி விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 42. | தையல் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 43. | சங்கு, சிப்பி சேகரித்து விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 44. | விதைகள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 45. | பரிசுப் பொருட்கள் விற்பனை (நடமாடும்) | 500.00 | 750.00 | 1000.00 |
| 46. | சலவைக் கல் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 47. | நடமாடும் முறுக்கு விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 48. | பெற்றோல் டீசல் விற்பனை (சிறிய) | 500.00 | 750.00 | 1000.00 |
| 49. | தட்டச்சு இயந்திரங்கள் திருத்துமிடம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 50. | அலுமினியப் பொருள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 51. | கருங்கல் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 52. | மின் இணைப்புப் பொருட்கள் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 53. | வாசனைப்பொருள் பக்கற் செய்து விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 54. | படம் பிரேம் போடும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 55. | செங்கல் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 56. | ஓடு விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 57. | தகரம் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |

*08-196/15*

---

**திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை**

தொழிற்துறை அனுமதிப் பத்திரக் கட்டணம் - 2025

*1987ஆம் ஆண்டில் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 149ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 147(1) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பட்டணமும் சூழலும் பிரதேச சபை எல்லைக்குள் கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிட்ட ஏதாயினும் தொழிற் துறையொன்றை 2025 ஆம் வருடத்தில் நடாத்திச் செல்வதற்காக வழங்கப்படும் ஏதேனும் அனுமதிப்பத்திரம் ஒன்றின் மேல் அத்தொழிற்துறை நடாத்திச் செல்லப்படும் இடத்தின் வருடாந்த பெறுமதி II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட எல்லைக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான அளவுகளிலான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடுவதென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச*

சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.ஷ

அத்துடன் 2025.03.31 ஆந் திகதிக்கு முன் தொழில் துறை நடாத்திச் செல்லும் நபர் பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்கு உரிய கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை.

பட்டணமும் சூழலும் பிரதேச சபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
2024, ஓகத்து 07.

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I வியாபாரத்தின் தன்மை | நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | தேநீர்க்கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 2. | சாப்பாட்டுக்கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 3. | தேநீரும் சாப்பாட்டுக்கடையும் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 4. | இருப்பிட வசதியுடன் ஒரு விடுதி வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 5. | உணவு விடுதியை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 6. | வெதுப்பகம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 7. | சிகை அலங்கார இடத்தை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 8. | இளைப்பாறும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 9. | சலவை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 10. | உணவு வகை விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 11. | ஹோட்டல் அல்லது உணவகத்தை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 12. | சுவையூட்டி பானம் தயாரிக்கும் இடம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 13. | ஒரு குரோசுக்கு மேல் விற்பனைக்காக சுவையூட்டி பானம் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 14. | பனிக்கட்டி விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 15. | குளிர்பானம் விற்பனை செய்யும் இடம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 16. | இனிப்பு உணவு வகைகள் விற்குமிடம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 17. | பழவகை விற்றல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 18. | மரக்கறி கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 19. | பசு மாட்டுப் பட்டி வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 20. | பால் சேகரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 21. | தேங்காய் எண்ணெய் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 22. | தேயிலை பொதி செய்து விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 23. | சில்லறை மற்றும் மொத்த வியாபாரம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 24. | அரிசி மொத்த விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I வியாபாரத்தின் தன்மை | நிரல் II இடத்தின் வருடாந்த மதிப்பீடு | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 25. | தானிய வகை விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 26. | தேயிலை மற்றும் மசாலா தூள்கள் பொதி செய்து விற்றல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 27. | பதம் பண்ணிய மீன் அல்லது கருவாடு விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 28. | பழவகைகள் அல்லது வேறு உணவுப் பொருட்களை கொள்கலனில் அடைக்கும் ஸ்தாபனம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 29. | செல்லப்பிராணிகளின் தீன் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 30. | செல்லப்பிராணிகள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 31. | வெல்டிங் கராஜ் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 32. | தேங்காய் எண்ணெய் வடித்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 33. | ஒலிபெருக்கி சேவை வழங்குதல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 34. | வெதுப்பக உற்பத்திகள் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 35. | கடலை முறுக்கு வியாபாரம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 36. | நடமாடும் இனிப்பு உணவு வகைகள் விற்றல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 37. | சூப் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 38. | பன்றிப் பண்ணை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 39. | பால் பதனிட்டு விற்பனை மற்றும் தயிர் விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 40. | மரக்காலை அல்லது விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 41. | குளிர்களி விற்பனை | 500.00 | 750.00 | 1000.00 |
| 42. | கார்ட் வெயார் | 500.00 | 750.00 | 1000.00 |
| 43. | இயந்திரம் மூலம் அல்லது கையினால் மரமறுக்கும் ஆலை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 44. | பட்டறை வைத்து வியாபாரம் செய்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 45. | காளான் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 46. | பலசரக்கு கடை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |
| 47. | சிற்றுண்டி வகைகள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1000.00 |
| 48. | அழகுக்கலை நிலையம் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1000.00 |

08 - 196/16

---

**திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை**

வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் அறவிடல் - 2025

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 (1)ஆம் உப பிரிவுடன் சொல்லப்பட்ட அச்சட்டத்தின் 68 ஆம் மற்றும் 126 VII (இ) பிரிவுகளினால் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பட்டணமும் சூழலும் பிரதேச சபை

*அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் சபைக்குச் சொந்தமான வாகனத் தரிப்பிடங்களில் சபையில் அனுமதி பெற்றுள்ள முச்சக்கர வண்டி தவிர ஏனைய வாகனங்களுக்குக் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் வாகனத் தரிப்பிடக் கட்டணம் நியமித்து அறவிடுவதென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை.

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
*2024, ஓகத்து 07.*

**அட்டவணை**

| *தொ. இல.* | *வாகனத்தின் பெயர்* | *அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணம்* | |
|---|---|---|---|
| | | *மாதாந்தம் ரூபா.ச* | *வருடாந்தம் ரூபா.ச* |
| *1.* | சபை அனுமதி பெறப்படாத முச்சக்கரவண்டி ஒன்றுக்கு | *300.00* | *3600.00* |
| *2.* | சபை அனுமதி பெறப்பட்டுள்ள முச்சக்கரவண்டிகள் தவிர | | நாள் ஒன்றுக்கு |
| *3.* | ஏனைய வாகனங்கள் | | |
| | வேன், கார், ஜீப் வண்டி, மோட்டார் வண்டி | | 50.00 |
| *4.* | ஏனைய மோட்டார் வாகனங்கள் | | 75.00 |
| 5. | துவிச்சக்கரவண்டி | | இலவசம் |

*08-196/17*

---

**திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை**

க்(பு)ரமபோன், ஒலிபெருக்கி, இயந்திரம் ஆகியவற்றை செயற்படுத்தல் - 2025

*1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 மற்றும் 126(ix)(ஊ) பிரிவுகளின் மூலம் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமும் 1988.08.23 ஆந் திகதிய 520/7ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் IV(அ) பிரிவில் கௌரவ உள்ளூராட்சி அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நியமத்துணை விதிகளில் 13 ஆம் பிரிவிற்கமைய பட்டணமும் சூழலும் பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதிக்குள் க்(பு)ரமபோன், ஒலிபெருக்கி, சுயமாக சத்தத்தை உண்டுபண்ணும் எதிரொலிக்கும் ஏதாவது உபகரணம் இயக்கும் போது அல்லது இயக்கத் திட்டமிடும் போது அல்லது இயக்க வேறொருவருக்கு இடமளிக்கும் போது அந்த அதிகரித்த சத்தத்தின் காரணமாக அல்லது அதன் எதிரொலியினால் அல்லது அதன் தொடர்ச்சியான இயக்கத்தினால் அயலில் வசிப்பவருக்கு தொல்லை ஏற்படின் அதனைத் தவிர்த்துக்.கொள்ள வேண்டுமெனவும் அவ்வாறு இயக்கத் திட்டமிட்டால் அதற்கு அனுமதிப்பத்திரக் கட்டணமாக நாளொன்றுக்கு ரூபா 1,000.00 ஐ 2025 ஆம் ஆண்டில் அறவிடுவதென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/ 123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை,

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
*2024, ஓகத்து 07.*

*08-196/18*

## திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை

*சந்தைக் கட்டிடங்கள், மைதானங்கள் குத்தகைக்கு விடுதல் மற்றும்
அதற்கான கட்டணம் அறவீடு செய்தல் - 2025*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122(1)ஆம் உப பிரிவுடன் சொல்லப்பட்ட 126 VIஆம் பிரிவுகளின் பிரகாரம் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 1988.08.23 ஆம் திகதிய 520/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நியமத்துணைவிதியினை 33ஆம் பிரிவிற்கமைய பட்டணமும் சூழலும் பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தை கடைகளை 2025 ஆம் ஆண்டிற்கு வாடகைக்கு /குத்தகைக்கு கேள்வி மூலம் வழங்குவதெனவும் அதற்கான கேள்வித்தொகையினை அறவிடுவதெனவும், சபைக்குரிய மைதானங்கள் ஒரு நாளைக்கு ரூபா 3,000.00 எனவும் அறவீடு செய்வதென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை,
உப்புவெளி, திருகோணமலை

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
*2024, ஓகத்து 07.*

*08-196/19*

---

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

*அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீதான வரி அறவிடுதல் - 2025*

*1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 153 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், பட்டணமும் சூழலும் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏதேனும் காணி, கட்டட நோக்கங்களுக்கு அல்லது நிரந்தரமான அல்லது கிரமமான பயிர்ச்செய்கை நோக்கங்களுக்குப் பொருத்தமானதாகவிருக்கின்றவிடத்து அல்லது அத்தகைய காணியானது அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்கெனப் பிரதேச சபையின் அபிப்பிராயப்படி நியாயமானதாகவுள்ள செலவில் அபிவிருத்தி செய்யக்கூடியதாகவிருந்து கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு அல்லது நிரந்தர அல்லது தொடர்ச்சியாக நெற்செய்கை செய்வதற்கு உசிதமான காணியில் -*

1. அத்தகைய காணியின் மீது கட்டடம் எதுவும் கட்டியெழுப்பப்படாதவிடத்து அல்லது
2. உள்ளபடியாக கட்டடங்களை அடக்கியுள்ள அத்தகைய காணியின் பரப்பளவான அத்தகைய காணியின் முழுப் பரப்பளவிற்கும் பிரதேச சபையினால் தீர்மானத்தின் மூலம் விதித்துரைக்கப்பட்ட விகிதாசாரத்தைவிடக் குறைந்தவொரு விகிதாசாரத்தைக் கொண்டிருக்குமிடத்து அல்லது
3. அத்தகைய காணி கிரமமான அல்லது நிரந்தரமான பயிர்ச்செய்கைக்கு உள்ளாக்கப்படாதிருக்கின்றவிடத்து

*பிரதேச சபையானது, அத்தகைய காணியின் மூலதன இடவமைவுப் பெறுமதியின் இரண்டு சதவீதத்தை விஞ்சாதவொரு வரியை அத்தகைய காணியின் சொந்தக்காரரிடமிருந்து ஆண்டுதோறும் அறவிடுதல் வேண்டுமெனவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபை,

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
*2024, ஓகத்து 07.*

*08-196/20*

## திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை

*காணி விற்பனை மீதான வரி அறவிடல் - 2025*

*1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் (1) உப பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பட்டணமும் சூழலும் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏதேனும் காணியொன்று ஏலதாரர், தரகராக அல்லது அவரின் சேவகர் அல்லது பிரதிநிதி மூலம் ஏலத்திலோ அல்லது வேறு வகையிலோ காணிகள் விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அவ் விற்பனையின் மூலம் கிடைக்கும் பணத்தில் 1% சதவீதம் வரியாக திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்குச் செலுத்தப்படல் வேண்டுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபை.

பட்டணமும் சூழலும் பிரதேச சபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
2024, ஓகத்து 07.

08-196/21

---

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

*பகிரங்க நாடக அரங்கேற்ற கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வரி அறவிடல் களியாட்ட வரிக்கட்டளைச் சட்டம் - 2025*

*1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 (1) ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மற்றும் (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம் 02 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் 1947 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதிய 9672 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நடாத்தப்படும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தில் சொல்லப்பட்ட ஏதேனும் களியாட்டமொன்றைப் பார்ப்பதற்காக நுழையும் போது செலுத்தப்படும் கட்டணத்தில் 25% இற்கு சமனான வரியொன்று நியமித்து அறவிடுவதெனவும் மேலும் மேற்சொல்லப்பட்ட 8(1) ஆம் பிரிவின் பிரகாரம் களியாட்ட வரியிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமெனவும் அதேபோன்று (176 அத்தியாயம்) பகிரங்க அரங்கேற்ற கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைப்படி கட்டணம் நியமித்து அறவிடுவதென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசசபை.

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை
2024, ஒகத்து 07.

08-196/22

---

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

*ஏக்கர் வரி அறவிடுதல் - 2025*

*1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (3) உப பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பட்டணமும் சூழலும் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட*

சட்டத்தின் 135 ஆம் பிரிவின் பிரகாரம் நில வரியிலிருந்து விலக்களிக்கப்படாததும், நில வரிக்கு உட்பட்டதுமான காணிகளுக்கு நிரந்தரமாக அல்லது கிரமமான பயிர்ச்செய்கையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற பிரதேச சபையானது அமைச்சரின் அங்கீகாரத்துக்கு அமைவாக ஏதேனும் பிரதேச சபையின் எல்லைகளினுள் அமைந்துள்ளதும் ஏதேனும் வகையான நிரந்தர அல்லது கிரமமான பயிர்ச்செய்கையின் கீழானதுமான ஒவ்வொரு ஹெக்டயார் காணி மீதும் கீழே தரப்பட்டுள்ள வீத வரிகளை விஞ்சாதவோர் ஏக்கர் வரியை விதித்து அறவிடலாம்.

| *காணியின் பரப்பளவு* | *வீதவரி ஆண்டொன்றுக்கு ரூபா.ச* |
|---|---|
| அத்தகைய பரப்பளவு ஐந்து ஹெக்டயார்களுக்கும் குறைவாக ஆனால் ஒரு ஹெக்டயாருக்குக் குறையாமல் இருக்குமிடத்து | 50.00 |
| அத்தகைய பரப்பளவு ஐந்து ஹெக்டயார்களாக அல்லது அதற்கு மேலாக இருக்குமிடத்து ஒவ்வொரு ஹெக்டேயர்களுக்கும் | 10.00 |

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆம் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை.

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
*2024, ஓகத்து 07.*

*08 - 196/23*

---

## திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை

விடுதிகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களில் திண்மக் கழிவகற்றல் மேற்கொள்வதற்கான கட்டணம் அறவிடுதல் -2025

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 159(2) ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நடாத்தப்படும் விடுதிகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களில் திண்மக் கழிவகற்றலை மேற்கொள்வதற்கு தனியான சேவை ஒரு தடவை நடைமுறைப்படுத்துவதற்கு ரூபா 500.00 கட்டண அறவீடு செய்யப்படும் எனவும், மாகாண நிதி ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய முற்பண வைப்புத் தொகையாக மாதாந்த திண்மக் கழிவகற்றல் அறவீட்டின் மூன்று மடங்கு செலுத்தப்படல் வேண்டும் எனவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 9(3) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாகவும் 2024.08.07 ஆந் திகதிய 2024/08/07/123 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக இத்தால் அறிவிக்கின்றேன்.*

செயலாளர்,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை.

பட்டணமும் சூழலும் பிரதேசசபை அலுவலகம்,
உப்புவெளி, திருகோணமலை,
*2024, ஓகத்து 07.*

*08 - 196/24*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.